தமிழ்நாட்டின் மருத்துவக் கட்டமைப்பை உலகத் தரத்தில் உயர்த்துவதற்கு

முதல்வர் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார்!

சென்னையில் இந்திய தொழிற்கூட்டமைப்பு – CII சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில் அமைச்சர் மா.சுப்பிரமணியன் விளக்கம்!

சென்னை,நவ.17-

தமிழ்நாட்டின் மருத்துவக் கட்டமைப்பை உலகத் தரத்தில் உயர்த்துவதற்கு முதல்வர் பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருவதாக மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன் விளக்கவுரையாற்றினார். நேற்று (16-11-2024) மீனம்பாக்கம் ரேடிசன் ப்ளூ ஹோட்டலில் நடைபெற்ற இந்திய தொழிற்கூட்டமைப்பு சார்பில் MEDCLAVE FOURTH EDITION - 2024 நிகழ்ச்சியில் கலந்துகொண்டு உரையாற்றினார். அந்த உரையின் சுருக்கம் வருமாறு:

தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு மக்கள் நல்வாழ்வுத்துறை பல்வேறு சிறப்புத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டில் செயல்படுத்திக்கொண்டிருக்கிற சிறப்புத்திட்டங்கள் தமிழ்நாட்டின் வரலாற்றில் எந்தக் காலத்திலும் இதுபோன்றதொரு வளர்ச்சியைப் பெற்றதில்லை என்று சொல்லுகிற வகையில் திட்டங்கள் வெற்றிகரமாகப் பீடுநடை போட்டுக்கொண்டிருக்கிறது. 2021 ஆகஸ்ட் திங்கள் 5ஆம் தேதி முதலமைச்சர் அவர்களால் கிருஷ்ணகிரி மாவட்டம் சாமணப்பள்ளியில் தொடங்கி வைக்கப்பட்ட திட்டம் 'மக்களைத் தேடி மருத்துவத் திட்டம்'. இத்திட்டத்தில் நீரிழிவுநோய், உயர் இரத்த அழுத்தம், பிசியோதெரபி, பாலியேட்டிவ் கேர், டயாலிசிஸ் போன்ற நோய் பாதிப்புகளுக்கு வீடுகளுக்கேத் தேடி சென்று மக்களுக்கு மருத்துவம் பார்க்கும் மகத்தானத் திட்டமாகத் தொடங்கி வைக்கப்பட்டது.

முதல்வர் வழங்கிய மருந்துப் பெட்டகம்!

தொடங்கி வைத்தபொழுது முதலமைச்சர் அவர்கள் குறிப்பிட்டது, முதல் மருந்துப் பெட்டகத்தை இப்போது இந்த சகோதரிக்குத் தருகிறோம். இத்திட்டம் வெற்றியடைந்து ஒரு கோடி பயனாளிக்கும் இத்திட்டம் போய்ச் சேர வேண்டும் என்று கூறினார். இத்திட்டத்தின்படி 50 லட்சமாவது பயனாளிக்கு முதலமைச்சர் அவர்களே சித்தலப்பாக்கம் பகுதிக்கு வருகைத் தந்து அங்கு ஒரு மூதாட்டிக்கு மருந்துப்பெட்டகத்தை வழங்கினார். 60 லட்சமாவது பயனாளிக்குநானும், துறையின் அலுவலர்களும் மதுரை மாவட்டம் மகிட்டாம்பட்டி எனும் கிராமத்தில் ஒருவருக்கு மருந்துப் பெட்டகத்தை வழங்கினோம். 75 லட்சமாவது பயனாளிக்கு நாமக்கல் மாவட்டம் போதைமலை என்னும் மலைவாழ் கிராமத்தில் உள்ள பழங்குடியினத்தைச் சேர்ந்த முருவம்மாள் எனும் சகோதரிக்கு மருந்துப்பெட்டகத்தை வழங்கினோம்.

80 லட்சமாவது பயனாளிக்கு சைதாப்பேட்டை கோதாமேட்டில் வழங்கினோம்.

90 லட்சமாவது பயனாளிக்கு விருகம்பாக்கத்தில் ஒரு இசுலாமிய சகோதரிக்கு வழங்கினோம்.

1 கோடியே ஒரு லட்சமாவது பயனாளிக்கு தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களின் விருப்பத்தை நிறைவேற்றும் விதமாக திருச்சி மாவட்டத்தில் முதலமைச்சர் அவர்களே கலந்துகொண்டு சன்னியாசிப்பட்டியில் மருந்துப் பெட்டகத்தை வழங்கினார். இத்திட்டம் இன்றைக்கு 1 கோடியே 80 லட்சத்தையும் கடந்து, 1 கோடியே 99 லட்சத்தையும் கடந்து 2 கோடியாவது பயனாளிக்கு இன்னும் 10 நாட்களில் மருந்துப்பெட்டகத்தை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களே வழங்க இருக்கிறார்கள். இந்த மாதிரியானத் திட்டங்கள் வேற எந்த நாட்டிலும்கூட இல்லை.

அமெரிக்காவில் கிடைத்த பாராட்டு!

அண்மையில் நானும், மருத்துவத் துறை செயலாளரும் அமெரிக்காவுக்கு சென்றிருந்தபோது, அமெரிக்க பாஸ்டன் நகரில் ஹார்டுவேர்டு பல்கலைக்கழகத்தில் 20க்கும் மேற்பட்ட மருத்துவ வல்லுநர்கள் பங்கேற்ற அக்கூட்டத்தில் தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் திட்டங்களையெல்லாம் விளக்கிக்கூறி, அதற்கான விளக்கப் படங்களைப் போட்டுக் காட்டியபோது இது உலகின் வேறு எந்த பகுதியிலும் இல்லாத ஒன்று என்றுமகிழ்ந்து பாராட்டினார்கள். அதேபோல் பால்டிமோர் ஜான் ஆஃப்கிங்ஸ் பல்கலைக் கழகத்தில் மாணவர்களுக்கு வகுப்பெடுத்தபோது தமிழ்நாட்டில் செயல்படுத்தப்படும் திட்டங்களையெல்லாம் தெரிவித்தபோது அம்மாணவர்கள் வியந்துப் பாராட்டினார்கள்.

வாசிங்டன் நகரில் நடைபெற்ற உலக வங்கித் தலைவர்களுடனானக் கூட்டத்தில் தமிழ்நாட்டின் மருத்துவத் திட்டங்களை மக்களைத் தேடி மருத்துவம், இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும்-48, பாதம் காப்போம், சிறுநீரகம் பாதுகாப்போம், இதயம் காப்போம், கலைஞரின் வருமுன்காப்போம் திட்டம், மக்களைத் தேடி மருத்துவ ஆய்வுத்திட்டம், தொழிலாளர்களைத் தேடி மருத்துவத் திட்டம், செயற்கைக் கருத்தரிப்பு மையம் போன்ற பல்வேறு சிறப்புத் திட்டங்களை எடுத்துரைத்தபோது, அவர்களே வியந்து இத்திட்டங்கள் தமிழ்நாட்டோடுநின்றுவிடக்கூடாது உலகம் பூராவும் இத்திட்டங்கள் செயல்படுத்தப்பட வேண்டும் என்று அவர்களுடைய விருப்பத்தைத் தெரிவித்தார்கள்.

இதைவிட கூடுதலான ஓர் மகிழ்ச்சி என்னவென்றால், கடந்த செப்டம்பர் 25ஆம் தேதி அமெரிக்காவில் உள்ள ஐ.நா. சபையின் 79வது பொதுக்கூட்டம் கூட்டப்பட்டது. அதில் உலகின் தொற்றா நோய்களுக்காக மருத்துவம் பார்ப்பதில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக இருந்து கொண்டிருக்கிறது. அதில் தமிழ்நாட்டிற்கு இந்தாண்டிற்கான United Nation Integrated Taskforce Award கடந்த வாரம் அனுப்பி வைத்தார்கள். ஒரு சில நாட்களுக்கு முன்னால்தான் தமிழ்நாடு முதலமைச்சரிடம் அவ்விருதினைக் காண்பித்து வாழ்த்துப்பெற்றோம்.

மருத்துவக் கல்வியில் தமிழ்நாட 3–வது இடம்!

தமிழ்நாட்டின் மருத்துவக் கல்வி என்பது தனியார் மருத்துவக் கல்லூரிகளாக இருந்தாலும், அரசு மருத்துவக் கல்லூரிகளாக இருந்தாலும் NIRS தேசிய நிறுவன தரவு பட்டியலில் தமிழ்நாடு 3வது இடத்தைப் பிடித்திருக்கிறது. சென்னையில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை 9வது இடத்தைப் பிடித்து சாதனைப் படைத்திருக்கிறது. இந்தியாவில் 36 மாநிலங்கள் இருந்தாலும் தமிழ்நாடு உணவுப் பாதுகாப்புத்துறையில் முதல் மூன்று இடங்களைத் தமிழ்நாடு தொடர்ந்து தக்கவைத்துக்கொண்டிருக்கிறது. காசநோய் பாதிப்பை குறைத்ததற்காக கடந்த 2022ஆம் ஆண்டு புதுதில்லியில் நடைபெற்ற உலக காசநோய் ஒழிப்புத் தினத்தில் நீலகிரி மாவட்டத்திற்கு வெள்ளிப் பதக்கமும், விழுப்புரம், சிவகங்கை, நாமக்கல், கன்னியாகுமரி, கரூர் ஆகிய மாவட்டங்களுக்கு வெண்கலப் பதக்கமும் கிடைத்திருக்கிறது. என்கோர்ஸ் என்று சொல்லக்கூடிய 545 விருதுகளும், அதேபோல் லக்சையா விருதுகளைப் பொறுத்தவரை 60க்கும் மேற்பட்ட விருதுகளை கடந்த மூன்று ஆண்டுகளில் பெற்றிருக்கிறோம். இப்படி பல்வேறு விருதுகளை ஒன்றிய அரசு கடந்த மூன்று ஆண்டுகளில் 650க்கும் மேற்பட்ட விருதுகளைப் பெற்றிருக்கிறோம் என்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறோம். மகப்பேறு சிக்கல் உள்ள கர்ப்பிணிப் பெண்களைக் கண்டறிந்து அவர்களுக்கு சிகிச்சை அளித்ததில் தேசிய அளவில் தமிழ்நாடு முதல் இடத்தைப் பெற்றிருக்கிறது. அரசு மருத்துவமனைகளும், தனியார் மருத்துவமனைகளும் ஒருங்கிணைந்து பணியாற்றி, உலகமே உற்று நோக்கும் வகையில் தமிழ்நாடு மிகப்பெரிய அளவில் இடத்தைப் பெற்றிருக்கிறது.

இந்தியாவின் பல்வேறு வடகிழக்க மாகாணங்களிலிருந்தும், இந்தியாவின் ஆந்திரா, கர்நாடகா, கேரளா போன்ற மாநிலங்களிலிருந்தும், வடமாநிலங்களிலிருந்தும் மேற்கு வங்காளம், அஸ்ஸாம், மணிப்பூர், மேகாலயா, திரிபுரா, நாகாலாந்து போன்ற மாநிலங்களிலிருந்தும் சென்னைக்கு வந்து சிகிச்சைப் பெறுகிறார்கள். அதேபோல் ஆசியா, ஆப்பிரிக்கா போன்ற பல்வேறு 30க்கும் மேற்பட்ட நாடுகளிலிருந்து சென்னைக்கு வந்து சிகிச்சைப் பெற்றுச் சென்றுக் கொண்டிருக்கிறார்கள் என்பது தமிழ்நாட்டிற்குக் கிடைத்திருக்கிற ஓர் வரலாற்றுப் பெருமை என்று சொன்னால் அதில் மிகையிருக்காது.

முதல்வர் தொடங்கி வைத்த இன்னுயிர் காப்போம் திட்டம்!

தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த 2021ஆம் ஆண்டு டிசம்பர் திங்கள் 21அன்று மேல்மருவத்தூரியில் இன்னுயிர் காப்போம் நம்மைக் காக்கும்-48 திட்டத்தைத் தொடங்கி வைத்தார். தமிழ்நாட்டில் அதிக விபத்துகள் நடக்கும் ஹாட்ஸ்பாட் என்று 500 இடங்கள் கண்டறிந்து அதைச் சுற்றியுள்ள தனியார் மற்றும் அரசு மருத்துவமனைகளில் இதற்கான சிகிச்சைகள் வழங்கப்படுகின்றன. விபத்தில் பாதிக்கப்பட்டு சிகிச்சைக்கு ரூ.1 லட்சம் அளிக்கப்படுகிறது. அந்நிதி தற்போது தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால் ரூ.2 லட்சமாக உயர்த்தப்பட்டிருக்கிறது. இத்திட்டத்தின்கீழ் இதுவரை 3 லட்சத்து 7 ஆயிரத்து 253 பேர் பயனடைந்திருக்கிறார்கள். ரூ.269 கோடியே 94 லட்சம் ரூபாய் இதற்காக செலவிடப்பட்டு இந்த உயிர்கள் காப்பாற்றப்பட்டிருக்கிறது. இந்தச் சாதனை என்பது அரசு மருத்துவமனையை மட்டும் சார்ந்தது கிடையாது. தனியார் மருத்துவமனைகளும் இணைந்து இந்த சாதனையைச் செய்திருக்கிறது. இத்திட்டத்தில் அரசு மருத்துவமனைகள் 238ம், தனியார் மருத்துவமனைகள் 464ம் ஆக, 762 மருத்துவமனைகள் இந்த மகத்தான சேவையை சிறப்பான வகையில் வழங்கிக்கொண்டிருக்கின்றனர்.

அதேபோல் இன்சூரன்ஸாக இருந்தாலும், உடலுறுப்புக் கொடை வழங்குவதாக இருந்தாலும், இந்திய மாநிலங்கள் ஒடிசா, ஆந்திரா, தெலுங்கானா போன்ற மாநிலங்களிலிருந்து தமிழ்நாட்டிற்கு வருகைத் தந்து தமிழ்நாட்டில் செயல்படுத்துகிறத் திட்டங்களைப் பற்றி தெரிந்துகொண்டு, அதை தாங்களும் பயன்படுத்திக்கொள்ளுகிற நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள். அந்த வகையில் இன்று உடலுறுப்புத் தானங்கள் கூடியிருக்கிறக் காரணத்தினால் உடலுறுப்பு மாற்று அறுவை சிகிச்சை என்பது இன்றைக்கு மிகச் சிறப்பாக இதய மாற்று அறுவைச் சிகிச்சை, கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை, தோல் மாற்று அறுவை சிகிச்சை, எலும்பு மஜ்ஜை மாற்று அறுவை சிகிச்சை, கண் கருவிழி மாற்று அறுவை சிகிச்சை என்று தமிழ்நாட்டில் இன்சுரன்ஸ் தொகை 22 லட்சம் ரூபாய் வழங்குகிற மகத்தான நிகழ்வு தமிழ்நாட்டில் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அந்த வகையில் அரசு மருத்துவமனைகள் 855ம், தனியார் மருத்துவமனைகள் 990 மருத்துவமனைகள் ஆக மொத்தம் 1,845 மருத்துவமனைகளில் இந்த இன்சுரன்ஸ் காப்பீடு என்பது பயன்பாட்டில் இருந்து வருகிறது. அதன்படி ஒரு ஆண்டிற்கு 1500 கோடிக்கும் மேலானத் தொகை தமிழ்நாடு அரசு இன்சுரன்ஸ்க்காக வழங்குகிறது. ஐந்து ஆண்டுகளுக்கு 7500 கோடிக்கும் மேலானத் தொகை காப்பீட்டிற்காகத் தமிழ்நாடு அரசு வழங்குகிறது.

புதிய புதிய மருத்துவ கட்டமைப்புகள்!

தமிழ்நாட்டைப் பொறுத்தவரை மிகச் சிறப்பான வகையில் புதிய புதிய மருத்துவக் கட்டமைப்புகள் தொடர்ந்து ஏற்படுத்தப்படுகின்றது. ஓமந்தூரார் அரசு பன்னோக்கு உயர் சிறப்பு மருத்துவமனையில் ரூ.34 கோடியே 60 லட்சம் செலவில் இந்தியாவில் முதல்முறையாக குறிப்பாக மாநில அரசுகள் நடத்துகிற மருத்துவமனையில் இல்லாத அதிநவீன இயந்திர மனித சிகிச்சை மையம் - ரோபோடிக் அட்வான்ஸ் சென்டர் ஒன்று கடந்த 2022ஆம் ஆண்டு மார்ச் 15 அன்று தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். தமிழ்நாட்டைத் தவிர வேறு எந்த மாநில அரசு மருத்துவமனைகளிலும் இந்த வசதி இல்லை. தமிழ்நாட்டில் தனியார் மருத்துவமனைகளில் வேண்டுமானால் அந்த இயந்திரம் இருக்கலாம்.

பொதுவாக 120 டிகிரி சுழன்று அறுவைச் சிகிச்சை செய்ய முடியும். இந்த ரோபோடிக் அறுவை சிகிச்சை இயந்திரத்தில் மூலம் 360 டிகிரி சுழன்று அறுவைச் சிகிச்சை செய்ய முடியும் என்ற மிகப்பெரிய அளவில் அந்த மருத்துவமனையில் செயல்படுத்தப்பட்டிருக்கிறது. அதுமட்டுமன்று இரண்டு நாட்களுக்கு முன்புதான் கோவையில் ஒரு புதிய 1.5 டெக்சா எம்.ஆர்.ஐ ஸ்கேன் கருவி ஒன்றை தொடங்கி வைத்தேன். பழைய எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவிகளை விட அதிவேகமானது. குறைந்த சத்தத்தை உருவாக்கக் கூடியது. அதிக எண்ணிக்கையில் ஸ்கேன் செய்ய முடியும். நோயர்கள் காத்திருப்பு நேரத்தைக் குறைக்க முடியும்.

அதேபோல் கலைஞர் நூற்றாண்டு அரசு மருத்துவமனையில் 1.5 டெக்சா எம்.ஆர்.ஐ. ஸ்கேன் கருவி, நரம்பியல், இதயம், புற்றுநோய் சிகிச்சை செய்வதற்கு தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது. நவீன வகையிலான கருவிகள் டபுள் பலூன் என்டோஸ்கோப்பி கருவி ஒன்று கலைஞர் நூற்றாண்டு நினைவு மருத்துவமனையில் தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது. இது போல் நவீன கேத்லாக் கருவி ஒன்றும் இம்மருத்துவமனையில் தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது. அதிநவீன 3டி பேனல் டி.எஸ்.ஏ. கருவி ஒன்றும் பயன்பாட்டில் இருந்து வருகிறது.

அதிநவீன கருவிகளுடன் கலைஞர் நினைவு பன்கோக்கு மருத்துவமனை!

அதிநவீன மூளை, நரம்பியல் கேத்லாக் ஒன்றும் ரூ.13 கோடி செலவில் இம்மருத்துவமனையில் தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது. அதிநவீன மூளை நரம்பு மின்காந்த சிகிச்சைக் கருவி ஒன்றும் இம்மருத்துவமனையில் உள்ளது. உயர் ரத்த அழுத்தம், உடல்பருமன், ஆக்ஸிஜன், இதயத் துடிப்பைத் துல்லியமாகக் கண்டறியும் மெட்டல் லேப் கருவி ஒன்றும் இம்மருத்துவமனையில் தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது. இப்படி அதிநவீன கருவிகள் கலைஞர் நூற்றாண்டு அரசு நினைவு பன்னோக்கு மருத்துவமனையில் தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்கள் தமிழ்நாட்டின் மருத்துவக் கட்டமைப்பை உலகத் தரத்திற்கு உயர்த்துவதற்குரிய பல்வேறு நடவடிக்கைகளை எடுத்து வருகிறார். தமிழ்நாட்டில் அரசு மருத்துவமனைகளின் தரம் மற்றும் மருத்துவச் சேவை உயர்ந்திருப்பதினால் அரசு மருத்துவமனைகளுக்கு வரும் மக்களின் தொகை என்பது பல மடங்கு அதிகரித்திருக்கிறது. அரசு மருத்துவமனைகளுக்கு பொதுமக்கள் கடந்த மூன்று ஆண்டுகளுக்கு முன்பு வந்ததைக் காட்டிலும் மூன்றாண்டுகளுக்குப் பிறகு அரசு மருத்துவமனைகளுக்கு பொதுமக்களின் வருகை என்பது இரண்டு, மூன்று மடங்கு அதிகரித்திருக்கிறது.

அரசு மற்றும் தனியார் மருத்துவச் சேவைகளை ஒருங்கிணைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. தனியார் மருத்துவமனைகளில் சிறந்து விளங்குகிற மருத்துவமனைகளுடன், அரசு மருத்துவமனைகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் செய்யப்பட்டிருக்கிறது. குறிப்பாக டாக்டர் ரெலா அவர்கள் மூலம் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சைக்கு ஒரு ஒப்பந்தம் போடப்பட்டிருக்கிறது. அப்பல்லோ மருத்துவமனை மூலம் குழந்தைகளுக்கான இதயமாற்று அறுவைச் சிகிச்சைக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டிருக்கிறது. கங்கை மருத்துவமனையுடன் ஒப்பந்தம் போடப்பட்டிருக்கிறது. இப்படி சிறப்பாக செயல்படும் மருத்துவ நிர்வாகங்களோடு ஒப்பந்தங்கள் போடப்பட்டு அது பயன்பாட்டில் இருந்து வருகிறது.

கோவிட் காலங்களில் முதல்வர் எடுத்த நடவடிக்கை!

சி.ஐ.ஐ.ஏ. அமைப்பு கோவிட் தொற்றுக் காலங்களில் பெரிய அளவில் அரசுக்கு உறுதுணையாக இருந்தது. சிலிண்டர்ஸ், கான்சன்ரேட்டர்ஸ், தடுப்பூசி போன்றவற்றை வழங்குவதில் சிறப்பாக கைக்கொடுத்தது. ஒன்றிய அரசு தடுப்பூசி செலுத்துவதில் 75 சதவிகிதத் தடுப்பூசிகள் அரசு மருத்துவமனைகளுக்கும், 25 சதவிகிதத் தடுப்பூசிகளை தனியார் மருத்துவமனைகளுக்கும் வழங்கியது. அரசு மருத்துவமனைகளில் முழுவதுமாக 75 சதவிகிதத்தைச் செலுத்திய நிலையில், தனியார் மருத்துவமனைகளில் 25 சதவிகிதத் தடுப்பூசிகள் தேங்கிய நிலையில் இருந்தது. அதனைத் தடுத்திட தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் ஒன்றிய அரசிற்கு 90 சதவிகிதம் தடுப்பூசிகளை அரசு மருத்துவமனைகளுக்கும், 10 சதவிகிதத்தை மட்டும் தனியார் மருத்துவமனைகளுக்கு வழங்கினால் போதும் என்று கடிதம் ஒன்றினை அனுப்பினார். ஆனால் அதனை ஒன்றிய அரசு ஏற்கவில்லை.

ஆனால் முதல்வர் அவர்கள் கூறியதை காவேரி மருத்துவமனை நிர்வாகம் ஏற்று அந்த 25 சதவிகித தடுப்பூசிகளை சி.எஸ்.ஆர். நிதி பங்களிப்புடன் பொதுமக்களுக்கு இலவசமாக தருகிறோம் என்று தெரிவித்தார்கள். அதன்படி தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சி.எஸ்.ஆர். நிதி உதவியின் கீழ் 25 சதவிகிதத் தடுப்பூசி வழங்கும் திட்டத்தை காவேரி மருத்துவமனையில் தொடங்கி வைத்தார்கள். அத்தடுப்பூசித் திட்டத்தை ஓசூரில் உள்ள காவேரி மருத்துவமனையிலும், திருச்சியில் உள்ள காவேரி மருத்துவமனையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். தமிழ்நாடு முழுவதும் தடுப்பூசி வழங்குவதற்கு முழு ஒத்துழைப்பை வழங்கியதற்கு இந்த நேரத்தில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இவ்வாறு அமைச்சர் மா.சுப்பிரமணியன் உரையாற்றினார்.

சென்னை தெற்கு மாவட்டம், மாவட்டச் செயலாளர், அமைச்சர் மா.சுப்பிரமணியன் ஆலோசனைப்படி வில்லிவாக்கம் தெற்கு ஒன்றியம், வானகரம் ஊராட்சியில் இல்லந்தோறும் இளைஞரணி உறுப்பினர் சேர்க்கை ஒன்றிய இளைஞரணி அமைப்பாளர் இரா. வினோத் தலைமையில்,மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஏ.எம்.வி. பிரபாகர்ராஜா எம்.எல். ஏ,மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர், 151வது வார்டு மாமன்ற உறுப்பினர் ச.சங்கர் கணேஷ் எம்.சி., ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. அதுபோது மாவட்ட விவசாய தொழிலாளர் அணி அமைப்பாளர் எஸ்.பி. அருள்,ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர்கள் க. செந்தில்குமார்,எஸ்.பி. முரளிகிருஷ்ணன்,எஸ். ஜனார்தனன்,மாவட்ட பிரதிநிதி கு.சதீஷ் குமார்,ஒன்றிய ஆதிதிராவிட நலக்குழு அமைப்பாளர் எஸ்.ஜி. சாமிநாதன், தொண்டரணி அமைப்பாளர் ஜி. வரதன், ஒன்றிய சிறுபான்மையணி துணை அமைப்பாளர் ஏ.எம்.பர்மன் உள்ளிட்ட அனைத்து நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

பிரதமர் மோடி அடிக்கடி நினைவை இழந்து வருகிறார்!

ராகுல் காந்தி விமர்சனம்!

மும்பை,நவ.17-

பிரதமர் நரேந்திர மோடி நினைவை இழந்து வருவதாக காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்தி பேசியுள்ளார்.

மகாராஷ்டிர சட்டப்பேரவைத் தேர்தல் வருகிற நவம்பர் 20 அன்று நடைபெற உள்ளது. இதனைத் தொடர்ந்து, இன்று தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் அமராவதி நகரில் பேசிய மக்களவை எதிர்க்கட்சித் தலைவரான ராகுல் காந்தி, "மாநில அரசுகளின் வேட்பாளர்களை காசு கொடுத்து வாங்கி அரசைக் கவிழ்ப்பதற்கும், பெரும் தொழிலதிபர்களின் 16 லட்சம் கோடி கடனைத் தள்ளுபடி செய்வதற்கும் மத்திய அரசுக்கு உரிமை இருப்பதாக அரசியல் சட்டத்தின் எந்த இடத்திலும் எழுதப்படவில்லை.

அரசியலமைப்பை நாட்டின் மரபணுவாக காங்கிரஸ் கருதுகிறது. ஆனால், ஆளும் பாஜக மற்றும் ஆர்.எஸ்.எஸ். அமைப்புக்கு அது வெற்றுப் புத்தகம் மட்டுமே.

சமீப காலங்களில் நான் எழுப்பும் அதே பிரச்சினையைப் பற்றி பிரதமர் நரேந்திர மோடி பேசுகிறார் என்று என் சகோதரி என்னிடம் கூறினார். மக்களவையில் அவரிடம், சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தி, இடஒதுக்கீடு மீதான 50 சதவீத உச்சவரம்பை நீக்க வேண்டும் என்று கூறினேன். இப்போது அவர் தனது தேர்தல் கூட்டங்களில் நான் இடஒதுக்கீட்டுக்கு எதிரானவன் என்று கூறுகிறார். முன்னாள் அமெரிக்க அதிபரைப் போல பிரதமர் மோடி நினைவை இழந்து வருகிறார். அடுத்து, ராகுல் காந்தி சாதிவாரி கணக்கெடுப்புக்கு எதிரானவன் என்றும் அவர் கூறுவார்" என்று தெரிவித்தார்.

மேலும் பேசிய அவர், "ஜிஎஸ்டி மற்றும் பணமதிப்பு நீக்கம் ஆகியவை விவசாயிகளையும் சிறு வணிகர்களையும் கொல்லும் ஆயுதங்கள். நாட்டில் வேலையின்மை அதிகரித்து வருகிறது, அதனால்தான் சமூகத்தில் வெறுப்பு பரவுகிறது. மோடி அரசு இருக்கும்வரை புதிய வேலை வாய்ப்புகள் உருவாகாது.

நம் நாட்டில் வேலையில்லாத் திண்டாட்டம் மற்றும் பணவீக்கம் கட்டுப்பாட்டை மீறுகிறது. ஏழைகள் தங்கள் பிள்ளைகளுக்குத் திருமணம் செய்து வைக்க முடியாது. அதே நேரத்தில் தொழிலதிபர்களின் வீட்டுத் திருமணங்களில் கோடிக்கணக்கான ரூபாய் செலவிடப்படுகிறது.

தொழிலதிபர்கள் உங்களை பிரதமராக தேர்வு செய்யவில்லை, இந்திய மக்களே உங்களைத் தேர்ந்தெடுத்தனர் என்று மோடியிடம் நான் சொல்ல விரும்புகிறேன். தொழிலதிபர்கள் அவரை சந்தைப்படுத்தினார்கள் என்பதே உண்மை" என்றார்.

மும்பையில் தாராவி மறுசீரமைப்பு திட்டம் குறித்து பேசிய ராகுல் காந்தி, "தாராவியில் பத்து பணக்காரர்கள் மட்டும் வாழ்ந்திருந்தால் அங்குள்ள நிலம் கையகப்படுத்தப்பட்டிருக்காது. பணக்காரர்களின் நிலம் பறிக்கப்பட்டதாகக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? ஏழைகள் மற்றும் விவசாயிகளின் நிலத்தை மட்டும் ஏன் கையகப்படுத்த வேண்டும்? அவை அரசியல் சட்டத்தில் எழுதப்பட்டுள்ளதா?" என்று கேள்வி எழுப்பினார்.

திருவள்ளூர் கிழக்கு மாவட்டம், கும்முடிப்பூண்டி தொகுதி, எல்லாபுரம் வடக்கு மற்றும் தெற்கு ஒன்றியங்களில் வாக்காளர் சேர்த்தல், நீக்கல் மற்றும் திருத்தல் குறித்த வாக்காளர் சிறப்பு முகாம்களை மாவட்ட செயலாளரும் கும்முடிப்பூண்டி சட்டமன்ற உறுப்பினருமான டி.ஜெ.கோவிந்தராஜன் தொகுதி பொறுப்பாளர் அழகிரி சதாசிவம் முன்னிலையில் ஆய்வுகளை மேற்கொண்டார். உடன் ஜெ.மூர்த்தி, மு.கதிரவன், ஆ.சத்தியவேலு, தெற்கு ஒன்றிய பொறுப்பாளர் எஸ்.எம்.திருநாவுக்கரசு. வழக்கறிஞர் எ.சீனிவாசன். இ.ஜி.பார்த்திபன். ஏ.வெங்கடேசன் மற்றும் வாக்குச் சாவடி பாகமுகவர்கள் பங்கேற்றனர்.